சுருக்கம்

தொழில் – ரூ.32.61 கோடி செலவில் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனத்தின் வளர்ச்சியை மேம்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (கு.தொ) துறை

அரசாணை (நிலை) எண்.242 நாள் : 05.10.2015
மன்மத, புரட்டாசி –18
திருவள்ளுவர் ஆண்டு 2046

ஆணை:

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனத்தை மேம்படுத்துதல் தொடர்பாக கீழ்கண்ட தொழில் வளர்ச்சி திட்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

> "கோயம்புத்தூர் தகவல் தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனமானது, 32 கோடியே 61 லட்சம் ரூபாய் முதலீட்டில் சிறிய மற்றும் நடுத்தர தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு தேவையான, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அபிவிருத்தி மையம் ஒன்றினை ஏற்படுத்தும் வகையில் அம்மையத்திற்கு தேவைப்படும் கட்டட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 22 கோடியே 61 லட்சம் ரூபாயினை டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவனத்திடம் இருந்தும் 10 கோடி ரூபாயினை மத்திய அரசின் ASIDE மானியமாகவும் பெறப்பட்டு நிறைவேற்றப்படும்''.

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியான 22 கோடியே 61 லட்சம் ரூபாயினை டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவனத்திடமிருந்தும், 10 கோடி ரூபாயினை மத்திய அரசின் ASIDE மானியமாகவும் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கவும் திட்ட முன்னேற்றம் குறித்து அரசுக்கு மாதந்தோறும் அறிக்கை அனுப்புமாறும் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவன இயக்குநரை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட்,
4, ராஜீவ்காந்தி சாலை, தரமணி, சென்னை–113

நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை, சென்னை–9.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை– 9.
இ.கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

5/10/15
பிரிவு அலுவலர்